
பக்கங்கள் 23+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 01 சனிக்கிழமை 16.08.2025 | அதிர்வு 016

## சம்மாந்துறையில் கைக்குண்டு மீட்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வடக்கில் மூலைமுடுக்கெல்லாம் இராணுவம்; ஹர்த்தால் மூலம் எதிர்ப்பைக் காட்டுவோம்!

### வவுனியா மாநகர மேயர் அறைகூவல்



“வடக்கில் எங்கு பார்த்தாலும் இராணுவ முகாமை அவதானிக்கும் நிலையில் தெற்கின் நிலைமை வேறு விதமாக உள்ளது. எனவே, அதிகப்படியான இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு,கிழக்கில்முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். இதற்கு அனைவரும் ஆதரவு – ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.”

– இவ்வாறு வவுனியா 02

# ஹர்த்தாலுக்கு மு.கா. முழுமையான ஆதரவு



### கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் அறிவிப்பு

(கே.ஏ.ஹமீட், எஸ்.அஷ்ரப்கான்)

“பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாப்புப் படைகள், சட்டம் ஒழுங்கை மீறிக் கொடூரச் செயல்களில் ஈடுபடு வது நாட்டின் சட்ட அமுலாக்கத்தின் ஆழமான சீர்கேட்டை வெளிப்படுத்துகின்றது. எனவே, நீதி, பொறுப்புகூறல் மற்றும் இராணுவத்தினுள் நிலவும் தண்டனையற்ற சூழ்நிலைக்கு முடிவு கோரும் அமைதியான எதிர்ப்பாக எதிர்வரும் திங்கட்கிழமை (18 ஆம் திகதி) முன்னெடுக்கப் 02







# இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி கோர விபத்து!

### ஒருவர் மரணம்; 22 பேர் காயம்

தனியார் பஸ்ஸும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 22 பேர் காயமடைந்தனர்.

இந்தக் கோர விபத்து மொனராகலை, வெலியாய பகுதியில் இன்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் சாரதியே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திங்கள் 'ஹர்த்தால்' போராட்டத்துக்கு திருக்கோவில் பிரதேச சபை பேராதரவு

வரும் திங்கட்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியால் வடக்கு, கிழக்கில் அறிவிக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு, திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிக்குமார் தலைமையிலான சுயேச்சைக் குழு முழுமையான ஆதரவை அறிவித்துள்ளது.

அத்துடன் திருக்கோவில் பிரதேச மக்களும் வர்த்தகர்களும் இந்தக் ஹர்த்தாலுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் தவிசாளர் சு.சசிக்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்தையும், முல்லைத்தீவில் உயிரிழந்த இளைஞருக்கு நீதி கோருவதையும், செம்மணி போன்ற இனப் படுகொலை சம்பவங்களுக்கு நீதி நிறைவேற்றப்பட வேண்டியதையும் கருத்தில் கொண்டு அனைவரும் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

இது கட்சி சார்ந்த ஒன்றல்ல, இனத்தின் நலனைக் கருதிய நடவடிக்கை என்பதால், அனைவரும் ஒன்றிணைந்து ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்." - என்றார்.

# கிராம உத்தியோகத்தர் கோர விபத்தில் மரணம்

வாகன விபத்தில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை மாத்தளை, கைக்காவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் உயிரிழந்துள்ளார்.

மாத்தளை - ரத்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய கிராம உத்தியோகத்தரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹர்த்தாலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ள ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்." - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் இன்று சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"முல்லைத்தீவில் அண்மையில் இடம்பெற்ற படுகொலை, இராணுவ உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது. பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய படைகள் தாமே சட்டமும் ஒழுங்கும் இழந்து இப்படி கொடூரச் செயல்களைச் செய்வது, இந்த நாட்டின் சட்ட அமுலாக்கத்தின் ஆழமான சீர்கேட்டை வெளிப்படுத்துகின்றது.

இப்படிப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பேற்கச் செய்வதில் அரசின் இயலாமை அல்லது விருப்பமின்மை, பொதுமக்களின் நம்பிக்கையைச் சிதைத்து, நிரபராதிகளின் உயிரை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது.

இன்னும் ஒரு கவலைக்குரிய விடயம் என்னவெனில் அரசு இஸ்ரேலில் இருந்து பயணிகளுக்கு விசா விலக்கு வழங்கும் போக்காகும். இவர்கள் பலர் காசாவில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியதாகப் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இஸ்ரேல் பாதுகாப்புப் படை உறுப்பினர்களே.

இந்தச் சூழ்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை (18 ஆம் திகதி) இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ள ஹர்த்தாலை முழுமையாக ஆதரிக்க எங்கள் கட்சி தீர்மானித்துள்ளது. இது நீதி, பொறுப்புக்கூறல், மற்றும் இராணுவத்தினுள் நிலவும் தண்டனையற்ற சூழ்நிலைக்கு முடிவு கோரும் அமைதியான எதிர்ப்பாகும்.

வடக்கு, கிழக்கில் உள்ள நமது முஸ்லிம் சகோதரர்களும், சகோதரிகளும் எதிர்வரும் திங்கட்கிழமை குறைந்தபட்சம் காலை நேரத்தில் தங்கள் கடைகள் மற்றும் தொழில்களை மூடுவதன் மூலம் இந்த ஒற்றுமைப் போராட்டத்தில் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து வன்முறையை நிராகரித்து, அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்." - என்றுள்ளது.

## சம்மாந்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பகுதியில் அம்பாறை - கல்முனை பிரதான வீதிக்கு அருகில் உள்ள குட்டை ஒன்றில் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இன்று முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

மீன் பிடிக்கக் குட்டைகளை இறைத்த சிறுவர்கள் வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டைக் கண்டுபிடித்தனர்.

அவர்கள், 119 எனும் பொலிஸ் அவசரப் பிரிவுக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார் கைக்குண்டைப் பார்வையிட்டனர்.

குண்டு செயலிழக்கும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் குற்றவியல் தடயவியல் பொலிஸாரை சம்பவ இடத்துக்கு வரவழைத்த சம்மாந்துறை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

"எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். நாட்டில் உள்ள ஏனைய ஏழு மாகாணங்களை விட வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகமாக இருக்கின்றது.

எனவே, வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தைக் குறைத்து அனைத்து மாகாணங்களுக்கும் சமமான அளவில் பங்கிடப்பட வேண்டும். எமது மக்களின் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும்.

தற்போதுகூட வவுனியா விமானப் படை முகாமுக்காக சகாயமாதாபுரத்துக்குப் பின்புறமுள்ள 8 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. ஆனால், அந்தக் கிராமத்தில் விளையாட்டு மைதானம் ஒன்றுகூட இல்லை.

இறம்பைக்குளம் கிராமத்தில் பொதுத் தேவைக்கான காணி இல்லை. அந்தப் பகுதியில் உள்ள மயானத்துக்கான நிலம் போதுமானதாக இல்லை.

எனவே, இப்படியான ஒரு நிலை இருக்கும் போது இந்தக் காணி சுவீகரிப்பை எப்படி அனுமதிக்க முடியும். எமது பகுதிகளில் கிராமங்களுக்கு ஓர் இராணுவ முகாம் ஒன்று கட்டாயம் இருக்கும் நிலை உள்ளது. ஆனால், தெற்கில் அவ்வாறு இல்லை. எனவே, இவ்வாறான நிலைமை மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி நாம் இந்தத் ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்." - என்றார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை எதற்கு? அது அரசின் பலத்தை வெளிப்படுத்தும்

## பிரதான எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் திலித் எம்.பி. வலியுறுத்து

"அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது அரசைப் பலப்படுத்துவதாகவே அமையும். எனவே, பிரதான எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும்."

- இவ்வாறு சர்வஜன அதிகாரத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்த காலப் பகுதியில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை



மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் சூழ்ச்சி இல்லை, பிரதான சூத்திரதாரி இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்ட காலத்தில் அல்ல, இராணுவத்தில் அவர் செயற்பட்ட காலப் பகுதியை மையப்படுத்தியதாக பிரேரணை வருவதால் அது ஒட்டுமொத்த இராணுவத்தின் புகழுக்கும் களங்கம் ஏற்படும்.

அதேவேளை, அரசுக்குள் பிளவு உள்ளது என்ற கருத்து நிலவுகின்றது. இந்நிலை அவ்வாறு இல்லை என்பதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உறுதிப்படுத்திவிடும். ஆளுங் கட்சியினர் இணைந்து அந்தப் பிரேரணையைத் தோற்கடித்து விடு வார்கள்." - என்றார்.




# 309 கிலோ கேரள கஞ்சாவுடன் வத்தளையில் இருவர் கைது!

வத்தளை, பங்கலாவத்த பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் வத்தளை, பங்கலாவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு – கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 43 மற்றும் 49 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 309 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 5 கோடி ரூபா ஆகும்.

கைது செய்யப்பட்ட இருவரும் வெலிசர நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




# உலக முயற்சியாளர் தினத்தையொட்டி வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி

(கி.வசந்தன்)

உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியா பல்கலைக்கழகத்தின் முயற்சியாண்மை கற்கைகள் பிரிவின் மாணவர்கள் இணைந்து இன்று சனிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணியை நடத்தினர்.

இலங்கையின் முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாடு இலங்கைக்கு முக்கியமான ஒரு விடயமாகக் கருத்தில் கொண்டு உலக முயற்சியாளர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாகவும் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழகத்தில் புத்தாக்கம் வர்த்தகக் கண்காட்சி மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகள் இடம்பெறுகின்ற நிலையிலேயே இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பூங்கா வீதியில் உள்ள வெளிவாரிகள் கற்கைகள் பிரிவில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் வவுனியா நகர் வழியாகச் சென்று மீண்டும் வெளிவாரி கற்கைகள் பீடத்தை வந்தடைந்தது.

இதன்போது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அ.அற்புதராஜா, வியாபாரக் கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.





# வீட்டிலிருந்து மூதாட்டியின் சடலம் மீட்பு!

வீடொன்றில் இருந்து மூதாட்டி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வெலிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை – மிரிஸ்ஸ, உடுபில பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மிரிஸ்ஸ, உடுபில பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி அந்த வீட்டில் தனியாக வசித்து வந்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை முதல் வீட்டில் இருந்து வெளியே வராமல் இருந்துள்ளார்.

இதனால் சந்தேகமடைந்த அயல் வீட்டுக்காரர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்துப் பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அந்த வீட்டில் உள்ள கட்டிலுக்கு மேல் இருந்து மூதாட்டியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 44 மறு திறன் கொண்ட சோலார் திட்டத்தின் கையளிப்பு நிகழ்வு!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரியபள்ளிவாசலில்நிர்மாணிக்கப்பட்ட 44மறு திறன் கொண்ட சோலார் மின்சார திட்டத்தை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நம்பிக் கையாளர் சபையின் தலைவர் அல்–ஹாஜ் எம். ஐ. அப்துல் அஸீஸ் தலைமையில் பள்ளிவாசல் அலுவலகத்தில் இடம்பெற்றது.



நிகழ்வில் பள்ளிவாசலின் மின்சார செலவினங்களை குறைத்து, பசுமை ஆற்றல் பயன்பாட்டை ஊக்குவிக்கும் இந்த முக்கியமான திட்டத்துக்கான நிதியை ஒதுக்கிவழங்கிய முன்னாள்இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் விஷேட அதிதியாக கலந்து கொண்டார்.

திட்டத்தின் செயலாக்கத்துக்கான ஒத்துழைப்பு வழங்கிய கல்முனை பிரதேச செயலாளர் டி. எம். எம். அன்ஸார், உதவி திட்டமிடல் பணிப்பாளர் முஹம்மது ஜௌபர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் முஹம்மது ஷபீக் மற்றும் தரநிலைக்கு ஏற்ப பணிகளை நிறைவேற்றிய ஒப்பந்தக்காரர் சகோதரர் முஹம்மது அன்வர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நீர்கொழும்பு – குடாப்பாடு பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.



செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வீடொன்றின் மதில் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.நீர்கொழும்பு – குடாப்பாடு பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தீர்வுக்கு ஒரே வழி

''தற்போதைய அரசாங்கம் 'வலிந்து காணாமலாக்கப்படல்' என்ற வார்த்தையைக் கூடப் பயன்படுத்துவதில்லை. இந்த அரசாங்கத்தினாலேயே இதற்குத் தீர்வைப் பெற்றுத்தர முடியாவிடின், வேறு எந்த அரசாங்கத்தில் இதனைச் செய்யமுடியும்?'' - என்று தெற்கைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான பிரிட்டோ பெர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான இக்கேள்வியும் சுட்டிக்காட்டலும் சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவரகெதர மற்றும் எம்.எவ்.எம். பஸீர் ஆகியோர் எழுதிய 'செம்மணி' எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து 'இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் மனிதப்புதைகுழிகள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை அரங்கத்தில் நடைபெற்ற சமயம் அதில் இடம்பெற்றன.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் நீதியமைச்சின் கீழ் இயங்குகின்றது. அவ்வாறிருக்கையில் அந்த அலுவலகத்தினால் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உரியவாறு இயங்குவதற்கு அதற்குரிய சுதந்திரமும், வளங்களும், சுயாதீனமும் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்துகின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது சற்றும் நம்பிக்கை இருக்கவில்லை. அவர்கள் மத்தியில் இந்த அலுவலகத்துக்கு பலத்த எதிர்ப்பே நிலவுகின்றது என்றும் அவர் சொன்னார்.

இதே நிழ்வில் உரையாற்றிய சட்டத்தரணி ரனிதா ஞானராஜா, ''காணாமல்போனவர்கள் அலுவலகத்தினால் எந்தப் பயனும் இல்லை. அது வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை. அது அமைச்சொன்றின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அமைச்சின் அறிவுறுத்தலிற்கு ஏற்ப செயற்படவேண்டிய நிலையில் உள்ளது. இந்த நிலையில் காணாமல்போனவர்கள் அலுவலகம் நீதியை பெற்றுத்தரும் என இன்னமும் சித்திரிக்கின்றார்கள்.'' என்று வெளிப்படையாக - அப்பட்டமாக - சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஆக, இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், பிற தரப்புகளும் ஏற்று, அது குறித்து விசாரித்து, உண்மைகளைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நம்பகத்தன்மை மிக்க - சுயாதீனமான - பக்கச்சார்பற்ற - கட்டமைப்பை உரிய அதிகாரங்களுடன் உருவாக்காத வரையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கு நீதி, நியாயமான, பாதிக்கப்பட்டோர் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வைக் காண்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

### கதவடைப்புக்கு முழுமையான ஆதரவு வழங்கி

# இராணுவ பிரசன்னங்களை குறைக்க ஒரு வலுவான போராட்டமாக்குவோம்!

### புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் கரிகாலன்

(பா.சதீசன்)

முழுமையான கதவடைப்புப் போராட்டத்துக்குப் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட வர்த்தகர்கள் , பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கட்சி பேதங்களை, மத பேதங்களை கடந்து ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இராணுவ பிரசன்னங்களைக் குறைக்க ஒரு வலுவான போராட்டமாக இது அமையும்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே.கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.




அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 18 ஆம் திகதி கதவடைப்பு கர்த்தாளுக்கான அழைப்பு, இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ச்சியான இராணுவ பிரசன்னம் அதிகரித்து காணப்படுகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட வர்த்தகர்கள் , பொது அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கதவடைப்பு போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

எங்களுடைய பிரதேசங்களில் இராணுவம் ஆக்கிரமித்து இருக்கும் இடங்களில் இருந்து அகன்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் இருக்க வேண்டும் என முழுமையான கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்குங்கள்.

இதன் மூலம் சர்வேச நாடுகளுக்கும், இலங்கை அரசுக்கும் தங்களுடைய பிரதேசங்களில் இராணுவ பிரசன்னங்களை குறைக்க ஒரு வலுவான போராட்டமாக இது அமைய இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் அண்மையில் நடந்த புதுக்குடிக்குடியிருப்புப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட முத்தையன்கட்டு பகுதியில் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் கொலை என்ற விடயம் இன்றுவரை மர்மமாகவே இருக்கின்றது.

அண்மையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியிருந்தார், நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று. ஊடகங்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

கடந்த காலங்களில் 30 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், அரச படைகளாலும் பல வழிகளில் எங்களுடைய பிரதேசங்களை ஆக்கிரமித்துப் பல வகையில் மக்களுக்கான துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதுவரைக்கும் அதற்கான நீதியான விசாரணைகள் எதுவும் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடந்ததாக தெரியவில்லை.

அவ்வாறு இருக்கும்போது இராணுவ பிரசன்னமானது தொடர்ச்சியாக எங்களுடைய பகுதிகளில் இருந்து நீக்கப்பட வேண்டும். இந்தக் கர்த்தால் அனுஷ்டிப்பானது கட்சி பேதங்கள் கடந்து, மத பேதங்களை கடந்து அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.– என்றார்.

# திங்கட்கிழமை ஹர்த்தாலுக்கு அனைவரும் ஆதரவு தாருங்கள்

### நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் வேண்டுகோள்

(வி.ரி. சகாதேவராஜா)

நாளைமறுதினம் 18ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியால் வடக்கு, கிழக்கில் விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆதரவை அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் ஹர்த்தாலுக்கு நாவிதன்வெளி பிரதேச மக்களும் வர்த்தகர்களும் முழுமையான ஆதரவை வழங்கும்படி கோரியுள்ளார்.



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“எமது வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் அதீத இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத்தீவில் இறந்த இளைஞருக்கு நீதி வேண்டியும், செம்மணி போன்ற இனப் படுகொலைக்கு நீதியை வழங்குமாறு கோரியும் அனைவரும் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இது கட்சி பேதங்களுக்கு அப்பால் இனத்தின் நன்மை கருதிய ஹர்த்தால். ஆகவே அனைவரையும் ஒன்றாக ஆதரவளிக்குமாறு வேண்டுகின்றோம்.”
– என்றார்.

# 12 வயது சிறுவன் நீரில் மூழ்கிப் பலி

நீரில் மூழ்கி சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் – மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏரியில் நீராடிக்கொண்டிருந்த சிறுவனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்

பிரதேசவாசிகள் இணைந்து நீரில் மூழ்கிய சிறுவனை மீட்டு, புத்தளம் வைத்தியசாலையில் அனுமதித்த பின் சிறுவன் ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் புத்தளம் – கரிகட்டிய பகுதியைச் சேர்ந்த 12 வயதுடையவர் ஆவார்.

சிறுவன் தனது அத்தையுடன் நேற்று ஏரியில் நீராடிக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# டயகம - மெராயா டெஸ்போட் வழியான அரச பஸ் தடையால் மக்கள் அவதியில்!

**(மஸ்கெலியா செ.தி.பெருமாள்)**

டயகமயில் இருந்து மெராயா டெஸ்போட் வழியாக காலை வேளையில் இலங்கை அரச பஸ் சேவை நடத்தப் படாமையால் பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

காலை 5.30 மணிக்கு டயகம நகரில் இருந்து புறப்படும் நுவரெலியா அரச பஸ் நிலையத்துக்கு சொந்தமான பஸ்சேவை கடந்த சில நாள்களாகச் சேவையில் இல்லை.

அதே போன்று ஹட்டன் அரச பஸ் நிலையத்துக்குச் சொந்தமான காலை 6 மணிக்கு ப் புறப்படும் அரச பஸ்ஸும் சேவையில் இல்லை.

இதனால் டயகம, அக்கரபத்தனை, மெராயா பகுதியில் இருந்து நுவரெலியா அரச வைத்திய சாலைக்கு செல்பவர்கள், நுவரெலியா மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்தில் பணிப்புரிபவர்கள், தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள செல்லும் நூற்றுக்கணக்கான வர்கள் உட்பட நுவரெலியா நகரத்தை அண்டிய பகுதிகளில் பணிபுரிபவர்களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த பஸ் சேவையில் இல்லாவிட்டால் அடுத்து வரும் தனியார் பஸ்ஸில் நோயாளர்கள், தாய்மார்கள் உடன் அதிக நெரிசலில் செல்ல வேண்டும்.

இந்த இரண்டு அரச பஸ் சேவைகளும் இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக நாம் நுவரெலியா பஸ் நிலையத்தில் பொறுப்பில் இருந்த அதிகாரியிடம் வாய்மூல முறைப்பாடு ஒன்றை செய்துள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு இந்த மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் குறிப்பாக அக்கர பத்தனை பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.



# ஆறு லட்சம் ரூபாவை வீடு தேடிச் சென்று வழங்கினார் மட்டு. மாவட்ட அரச அதிபர்!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

என்பு மச்சை நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு நேரில் சென்று பண உதவி வழங்கினார் மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன்.

என்பு மச்சை நோயால் பாதிக்கப்பட்ட லக்ஷ்மன் லியோன்சனின் வீட்டுக்குச் நேரில் சென்று அவரது சத்திர சிகிச்சைக் காக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆறு லட்சம் ரூபா உதவியை வழங்கினார்.

அண்மையில் வெளியாகிய சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கருவெப்பங்கேணி விபுலானந்தா கல்லூரியின் மாணவன் செல்வன் லக்ஷ்மன் லியோன்சன் ஒன்பது 'ஏ' தர சித்திகளைப் பெற்று சாதனை படைத்திருந்தார்.



மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனிடம் சத்திர சிகிச்சைக்கு 40 லட்சம் ரூபா தேவைப்படுகிறது என்று கூறியதைச் செவிமடுத்த அரச அதிபர் தம்மால் இயன்ற உதவியைப் பெற்றுத்தருவார் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாகத் தனக்கு தெரிந்த வெளிநாட்டில் உள்ள நன்கொடையாளரிடம் தெரிவித்திருந்த போது, குறித்த நன்கொடையாளர் உதவியுள்ளார். அவருடனேயே சென்று பண உதவியையும் வழங்கியுள்ளார்.

6 லட்சம் பண உதவி செய்த மாவட்ட அரச அதிபருக்கும், அரச அதிபருக்கு பணம் கொடுத்து உதவி செய்த பெரிய கல்லாறைச் சேர்ந்த கோபி கிறிஷ்ணா என்னும் நன்கொடையாளருக்கும் பண உதவியைப் பெற்ற குடும்பத்தார் நன்றி தெரிவித்துள்ளனர்.

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கலாசார அலுவல்கள் அமைச்சால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா போட்டியின் இந்த வருடத்துக்கான (2025) போட்டியில், சித்திரம் வரைதல் மாகாண மட்டப் போட்டிகளின் முடிவுகள் உத்தியோக பூர்வமாக கடந்த வாரம் வெளியாகின.

இதன் பிரகாரம் இந்தப் பிரதீபா போட்டிகளில் நாடு முழுவதும் இருந்து சுமார் 200 இற்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் அனைத்துப் பிரிவுகளிலும் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

இந்தக் கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் சிரேஷ்ட பிரிவில் கலந்துகொண்டு மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளனர்.

இது சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும். சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையமானது மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இந்த வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இந்த சித்திரப் போட்டியில் கலந்து வெற்றியீட்டிய சித்திரப் பாடநெறி மாணவர்களான ஏ. பஜ்ரத் ஹிமா முதலாம் இடத்தையும் எம்.என். பாத்திமா மனால் இரண்டாம் இடத்தையும் பெற்று, கலாசார மத்திய நிலையத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும் பில் இடம்பெறும் தேசிய மட்ட சித்திரப் போட்டியில் இம் மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.



# மாகாண தமிழ் மொழித்தினப் போட்டியில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தி முதலிடம்

(உடப்பு க.மகாதேவன்)

வாரியபொல ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தில் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ் மொழி தினப் போட்டியில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்து கலந்து கொண்ட மாணவிகள் இலக்கிய நாடகப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.



# யாழின் எட்டுப் பிரதேச செயலகங்களுக்கு புதிய செயலர்கள் நியமனம் பெறுகின்றனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எட்டுப் பிரதேச செயலகங்களுக்கு புதிய பிரதேச செயலாளர்களை பொதுச் சேவை ஆணைக்குழு நியமனம் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் பிரதேச செயலாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான சிபார்சை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டது. அதில் 6 பேர் தொடர்பான பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தோடு மேலும் இருவரைப் புதிதாக இணைத்து 8 பேரைப் பிரதேச செயலாளர்களாக பொதுச்சேவை ஆணைக்குழு உறுதிப் படுத்தியிருக்கின்றது.

இதற்கமைய ச.மஞ்சுளாதேவி, வனஜா செல்வரட்ணம், ந.திருலிங்கநாதன், பி.சத்தியசோதி, தயாறூபன், கு.பிரபாகரமூர்த்தி, உஷா சுபலிங்கம், ரி.அகிலன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த நியமனங்களுக்காக எட்டு உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை அமைச்சினால், இலங்கை நிர்வாகசேவை பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, அந்த விடயம் செய்தியாக வெளிவந்தமையை அடுத்து, அந்த எட்டு நியமனங்களையும் நிறுத்தி வைக்க வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேகாலத்தில் ஒரு சில உத்தியோகத்தர்கள் அந்த மாற்றங்களுக்கு எதிராக மேன் முறையீடும் செய்தனர். இவை தற்போது பொதுச் சேவை ஆணைக் குழுவால் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனங்களுக்காக யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் முன்னர் பரிந்துரைத்த எட்டுப் பெயர் கொண்ட பட்டியலில் இருவர் மாற்றப்பட்டே தற்போது அங்கீகரிக்கப்பட்ட நியமனப் பட்டியல் வெளியாகியுள்ளது.

# இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தில் யாழ்ப்பாணத்தில் பாரதநாட்டிய நிகழ்வுகள்








இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாரதநாட்டிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியா தூதரகம் நேற்று (15) மாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையத்தில் பாரதநாட்டியம் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

இந்த நிகழ்ச்சியில், சென்னையைச் சேர்ந்த சிறப்புமிக்க கலை ஆசான்களான ஸ்ரீமதி சித்ரா முரளிதரன் (ந்ரித்யக்ஷேத்ரா டான்ஸ் அகாடமி), ஸ்ரீ ஸ்வாமிமலை கே. சுரேஷ் மற்றும் ஸ்ரீ மதி துர்காதேவி சுரேஷ் (சமர்ப்பணா அக்டமி) மற்றும் ஸ்ரீமதி கிருஷ்ணப்ரியா ஜெயகர் (சித்ரமயா பாடசாலை) ஆகியோரின் சீடர்கள் அழகிய நடனங்களை நிகழ்த் தினர்.

துணைத் தூதர் எஸ். சாய் முரளி, தனது உரையில், இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்களுக்கு நன்



றியை தெரிவித்தார். இந்தியாவின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை நினைவுகூர்ந்து, அது நாடுகளுக்கிடையே நட்பு மற்றும் புரிதலுக்கான பாலமாக தொடர்ந்து விளங்குகிறது என்பதை வலியுறுத்தினார்.

இந்திய தேசியக் கொடியின் வரலாறு மற்றும் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய காட்சியும் இடம் பெற்றது. இதன் மூலம் பார்வையாளர்கள் இந்தியாவின் சுதந்திரப் பயணத்தை ஒரு பார்வையில் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் 300இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதில் மீன்வள, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணச் செயலாளர், மூத்த அரச அதிகாரிகள் அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் இந்திய சமூகத்தினர் மற்றும் இந்தியாவின் நண்பர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# ‘நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி’ என்னும் பொருளில் கண்காட்சி!

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெரும் திருவிழா காலத்தில் ‘நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி’ என்னும் தொனிப்பொருளில், நல்லூர் பாரதியார் சிலைக்கு அண்மையாகவுள்ள நெசவு கைத்தொழிற் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று சனிக்கிழமையிலிருந்து கண்காட்சி நிறைவு நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை கண்காட்சியை மக்கள் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





# உலக தொழில் முயற்சியாளர் தினம் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில்

மாபெரும் பிரமாண்டமான உலக தொழில் முயற்சியாளர் தினம் மற்றும் வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் காலை 9.30மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குச் சர்வதேச நாடுகளில் இருந்தும், எமது நாட்டினதும் தொழில் வல்லுநர்கள், தொழிலதிபர்கள், அனுசரனையாளர்கள், பங்குதார்கள், பல்தேசிய நிறுவனங்கள், அரச அரசசார்பற்ற திணைக்களங்களின் தலைவர்கள், தொழில் முயற்சியில் சாதனை படைத்தோர், இவர்களுடன் இன்னும் பலர் கலந்து கொள்ளவுள் ளனர். அத்துடன் 200 இற்கு மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட வுள்ளன.

இந்த நிகழ்வில் தொழில்முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள், தொழில் ஆரம்பிக்கவுள்ளவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடை விலகியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும். பொருத்தமான நாளை தெரிவு செய்து கலந்து கொள்ள முடியும்.

நகரப் பகுதியில் இருந்து பல்கலைக் கழகத்துக்கான போக்குவரத்து வசதி செய்யப்படும். முயற்சியாளர்கள் தங்கள் எது உற்பத்திகளை காட்சிபடுத்த விரும்பின் ஏற்பாட்டுக்குழுவுடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்று உங்களுக்கான இடத்தை 14 ஆம் திகதிக்கு முன்னரே உறுதிப்படுத்த வேண்டும்.

இந் நிகழ்வுக்கு வருகை தரும் தொழில்முற்சியாளர்கள் உங்கள் தரமான உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்பு, தொழிலுக்கான மேம் படுத்தல்கள், முதலீட்டுக்கான பங்குதார், வியாபார முன்னேற்றத்துக்கான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் போன்ற இன்னும் பல நன்மைகளைப் பெறமுடியும்.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் பயன் பெறுமாறும் பதிவுகள் மட்டுப்படுத்தப் பட்டவை என்றும் பதிவுகளை 12 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தொடர்புக்கு வடமாகாண விழா ஏற்பாட்டுக் குழுவிலுள்ள திருமதி சுகந்தி – 0760562107, அன்ரனிராயன் – 0768312967, செல்வி அபிதா – 0768444732 ஆகியோருடனும் –

கிழக்கு மாகாண விழா ஏற்பாட்டுக் குழுவிலுள்ள மகேந்திரன் – 0703780965, ராகுலன் – 0771234734, ரவிகாந்தன் – 0776622287 ஆகியோருடனும் தொடர்பு கொள்ள முடியும்.



# புதைக்கப்படாத எலும்புக்கூடுகள் நிலத்தைக் கிழித்து நீதி கேட்கின்றன

### சட்டத்தரணி ரனிதா ஞானராஜா

நீங்கள் உடல்களை புதைக்கலாம், ஆனால் உங்களால் உண்மையை புதைக்க முடியாது. புதைக்கப்படாத எலும்புக் கூடுகள் நிலத்தை கிழித்துக் கொண்டு வெளியேவந்து உலகத்துக்கும் மக்களுக்கும் எங்களை உரிய முறையில் புதைக்கவில்லை, எங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என தெரிவிக்க வருகின்றன என்று சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

தரிந்து ஜெயவர்த்தன, தரிந்து உடுவரகெதர எம்.எப்.எம். பசீர் ஆகியோர் இணைந்து எழுதிய செம்மணி எனும் நூலின் வெளியீடு வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நான் மூன்று முக்கிய விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறிப்பாக வடக்கு கிழக்கில், நாங்கள் ஏன் மனித புதைகுழிகளை பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் கடத்தப்பட்டவர்கள் அல்லது காணமல்போனவர்கள் காணாமலாக்கப்பட்டவர்களுடன் தொடர்புபடுத்த முயல்கின்றோம்?.

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக யுத்தம் இடம்பெற்றது. உலகில் அதிக எண்ணிக்கையானோர் பலவந்த காணாமலாக்கப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த குழு தெரிவித்துள்ளது.



ஐ.நாவின் குழு பலவந்தமாக காணாமலாக்கப்பட்டிருக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை எனத் தெரிவித்துள்ளது. அவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யுத்தகாலத்தின் பயங்கரவாத தடைச் சட்டம் என்ற மிகவும் கொடுரமான பயங்கரமான சட்டம் நடைமுறையிலிருந்தது., அவசரகாலச் சட்டம் போன்ற அதற்கு ஆதரவான சட்டங்கள் காணப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். இவை பயங்கரவாதத்தைக் கையாள்வதற்காக நடைமுறைக்கு வந்தவை. இந்தச் சட்டங்களை வலுக்கட்டாயமாக மிக இறுக்கமாகக் குறிப்பாக வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்தினர்.

விசாரணைக்காக அழைக்கப்பட்ட மக்கள், அவர்கள் ஒருபோதும் திரும்பி வரவில்லை. சோதனைச் சாவடிகள் ஊடாக நடந்துசென்று கொண்டிருந்தவர்கள், அதனை கடந்து சென்றவர்கள் ஒருபோதும் மீண்டும் திரும்பிரவரவில்லை. தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறும், சுற்றிவளைப்புகள் இடம் பெறும், மக்களை சுற்றிவளைத்து தலையாட்டி ஒருவரின் முன்னால் நிறுத்துவார்கள், அவர் தலையாட்டினால் அந்த நபரை கொண்டு செல்வார்கள், அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பலர் மீண்டும் திரும்பவில்லை.

2009 வரை இவற்றை திட்டமிட்ட முறையில் முன்னெடுத்தார்கள்.

வடக்கு கிழக்கிலும் முழு நாட்டிலும் 2009 மே மாதத்துடன் யுத்தம் முடிவடைந்துவிட்டது என நாங்கள் நினைக்கின்றோம். ஆனால் நீங்கள் அங்கு சென்றால், வடக்குக் கிழக்குக்கு விஜயம் மேற்கொண்டால், வடக்கு கிழக்கில் நிழல் யுத்தம் தொடர்ந்தும் நீடிக்கின்றது என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்துகின்றார்கள். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் கண்காணிப்பின் கீழ் இருக்கின்றனர். மனித உரிமை விடயங்களுக்காகச் செயற்படுபவர்கள் கண்காணிக்கப்படுகின்றார்கள்.

நாளாந்தம் ஒவ்வொரு நாளும் பலர் சி.ஐ.டி, டீ.ஐ.டியினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

சி.ஐ.டி., டீ.ஐ.டி. போன்ற அரச கட்டமைப்புகள் தங்கள் அலுவலகங்

தொடர்ச்சி▼

# புதைக்கப்படாத எலும்புக்கூடுகள் நிலத்தைக் கிழித்து நீதி கேட்கின்றன

தொடர்ச்சி▲

களை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தியுள்ளன. கொழும்பில் உள்ள தங்கள் அலுவலகங்களுக்கு விசாரணைக்கு அழைப்பதற்கு பதில் வடக்கு கிழக்கில் உள்ள தங்கள் அலுவலங்களுக்குப் பலரை விசாரணைக்கு அழைக்கின்றார்கள்.

மிகச் சமீபத்தில் கேள்விப்பட்டிருப்பீர்கள் , தரிந்துவும் அவரது நண்பர்களும் குமணனின் பெயரை இங்கே குறிப்பிட்டனர். குமணன் புகைப்பட ஊடகவியலாளர், அவர் தொடர்ச்சியாக தனது புகைப்படங்கள் மூலம் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து பேசிவரும் ஒருவர்.மிக வலுவான முறையில் அவர் இதனை செய்துவருகின்றார். அவரை 17 ஆம் திகதி விசாரணைக்காக அழைத்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் வடக்கு,கிழக்கில் நிலவரம் இவ்வாறானதாகத்தான் காணப்படுகின்றது.

ஏன் நாங்கள் மனித புதைகுழிகளை பலவந்தமாக காணாமல் போகச்செய்தலுடன் தொடர்புபடுத்த விரும்புகின்றோம் என்றால் , யுத்தம் முடிவடைந்த பின்னரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள பல குடும்பத்தவர்கள் உள்ளனர். அவர்கள் தங்கள் நேசத்துக்கு உரியவர்களது குறித்த பதிலை கோருகின்றனர். அவர்கள் சோதனைச் சாவடியில் காணாமல் போயிருக்கலாம் அல்லது யுத்தத்தின் இறுதித் தருணத்தில் சரணடைந்திருக்கலாம். அவர்கள் சரணடைந்தால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் எல்.எல்.ஆர்.சி. முன்னால் சாட்சியமளிக்கையில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் யுத்த வலயத்தில் இருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிக்கு உயிருடன் வரவில்லை என தெரிவித்தார். நாங்கள் இந்த எண்ணிக்கை குறித்தே பேசுகின்றோம்.

நாங்கள் தற்போது திறக்கப்பட்ட மனித புதைகுழிகளுடன் போராடுகின்றோம். 14 மனிதப் புதைகுழிகள் திறக்கப்பட்டு நீதி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது செம்மணி மனிதப் புதைகுழி குறித்துக் குறிப்பிடுவேன்.

கிருசாந்தி குமாரசுவாமி கொலை வழக்கு குறித்து இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டவேளை தனது வாயை திறந்த சோமரட்ண ராஜபக்ஷவால் இந்த விடயம் தெரியவந்தது. 1999 ஜுலை 3 ஆம் திகதி அந்தத் திகதியிலிருந்து அவர்கள் அந்த விடயத்தைக் கையாள ஆரம்பித்தனர். விசாரணைகளை முன்னெடுத்தனர். புதைக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இருந்து 15 மனித எச்சங்களை அகழ்ந்தனர். விசாரணைகள் முடிவடைந்ததும் ஆறு சந்தேகநபர்கள் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட அறிக்கை மீண்டும் கொழும்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு திரும்பிவரவில்லை.

முப்பது வருடங்களாகியும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எந்த அறிவுறுத்தல்களும் இல்லை. நாங்கள் குடும்பத்தவர்களை சென்று சந்திக்கும் போது அவர்கள் இரத்தமாதிரிகளை வழங்கியதாக மரபணு பரிசோதனைக்கு உட்பட்டதாக தெரிவிக்கின்றனர். மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை தங்கள் உறவுகள் என அடையாளம் காட்டியவர்களும் உள்ளனர். ஆனால் அதன் பின்னர் இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மக்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றது. அச்சுறுத்தல்களே இதற்குக் காரணம்.

14 மனித புதைகுழிகள் குறித்து பேசும்போது ஐந்து முக்கியமான மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் நான் ஆஜராகியுள்ளேன்.

ஒன்று மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி , மற்றையது மன்னார் சதொசா மனித புதைகுழி– 18 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன, அவை அநுராதபுரம் சட்டவைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டன. பின்னர் கொழும்புக்கு மாற்றப்பட்டன. எலும்பு பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது. இன்னமும வெளியாகவேண்டிய அறிக்கைகள் உள்ளன. 2013 இந்த நடவடிக்கைகள் ஆரம்பமாகின எவ்வளவு காலம் என்று நினைத்துப் பாருங்கள், குடும்பத்தவர்கள் ஒவ்வொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் சமூகமளித்துள்ளனர்.

சதொச மனித புதைகுழி 2018 இல் அடையாளம் காணப்பட்டது 379 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. கார்பன் டேட்டிங் இடம்பெற்றது. ஆய்வுகூட அறிக்கை வெளியானது. ஆனால் அது அர்த்தப் படுத்தப்படவில்லை. நாங்கள் கோரிய அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை. கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை எடுத்ததால் அது 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது. 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. தொல்பொருள் ஆராய்ச்சி, எலும்பு பரிசோதனை அறிக்கைகள் போன்றவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நீதிமன்றம் தடமறிதல் செயல்முறைக்கு உத்தரவிட்டுள்ளது. காணாமல்போனோர் அலுவலகத்துக்கு இதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. காணாமல்போனவர்கள் அலுவலகத்தால் எந்தப் பயனும் இல்லை. அது வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை. அது அமைச்சொன்றின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அமைச்சின் அறிவுறுத்தக்கு ஏற்ப செயற்படவேண்டிய நிலையில் உள்ளது.

இந்த நிலையில் காணாமல் போனவர்கள் அலுவலகம் நீதியை பெற்றுதரும் என இன்னமும் சித்தரிக்கின்றார்கள்.

செம்மணியில் 32 வாரங்கள் மிகச் சிறிய அளவு நிலப்பரப்பைத் தோண்டிய வேளை 141 மனித எலும்புக் கூடுகளை மீட்டுள்ளனர். சிறிய இடத்தில் இது மிகப்பெரியது. நாங்கள் அந்த பகுதி முழுவதையும் அகழ்வதற்கான கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை குறித்து குறிப்பிடவேண்டும், அங்கு மிகவும் ஆபத்தான நிலை காணப்படுகின்றது. எலும்புக்கூடுகள் மனித எச்சங்கள் கண்ணிவெடிகளுடன் கலந்து காணப்படுகின்றன. இது மிகவும் ஆபத்தான விடயம். எங்கயுளுக்கு இவற்றை கையாள்வதற்குத் தொழில்நுட்ப திறன் அவசியம்.

நாங்கள் மண்ணுக்குக் கீழே எங்கள் அன்புக்கு உரியவர்களைத் தேடுகின்றோம். காணாமலாக்கப்பட்டவர்கள் குடும்பத்தினர், உறவினர்கள், களைப்படைந்து விட்டனர். அவர்கள் பல ஆணைக்குழுக்களின் முன் சென்றுள்ளனர். நீதி வழங்குதல் என்பது மிகவும் மெதுவான மந்த கதியிலாள செயற்பாடாகக் காணப்படுகின்றது.

காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்கள் பதில்களுக்காகக் காத்திருக்கின்றனர். அவர்களுக்கு உண்மையை அறிவதற்கான உரிமையுள்ளது. தங்கள் நேசத்துக்கு உரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான உரிமையுள்ளது. அவர்களுக்குக் கௌரவமான இறுதிச் சடங்கினை முன்னெடுப்பதற்கான உரிமையுள்ளது.

உண்மையான தகவல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன . தணிக்கைக்கு உள்ளாகின்றன. வடக்கில் என்ன நடந்தது, நடக்கின்றது என்பது தெற்கில் உள்ளவர்களுக்கு முழுமையாகத் தெரியாது. உண்மையை தெரியப்படுத்துவதை அதிகரிக்கவேண்டும்.

உண்மையை ஏற்றுக் கொள்ளவேண்டும். இன்றுவரை, யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களை நாங்கள் பூர்த்தி செய்கின்றோம். ஆனால் அரசிடம் இருந்து எந்த ஒப்புக்கொள்ளுதலும் இல்லை. இது எனது சகோதரிக்கு இடம் பெற்றுள்ளது. நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு நீதியை – உண்மையை வழங்குவோம் என இதுவரை அரசு தெரிவிக்கவில்லை.– என்றார்.




# அல்ஜசீரா ஊடகவியாளர் இஸ்ரேலால் படுகொலை: பாலஸ்தீன ஊடகம் மீதான தொடரும் அச்சுறுத்தல்!

**■ ஜங்கரன் விக்கினேஸ்வரா.**

(அல்ஜசீரா ஊடகவியாளர் படுகொலை தாக்குதல் நடந்த சிறிது நேரத்திலேயே, அனஸ் அல்-ஷெரிப்பை குறிவைத்ததாக இஸ்ரேலிய ராணுவம் உறுதிப்படுத்தியது. அவர் ஹமாஸில் ஒரு பயங்கரவாதப் பிரிவின் தலைவராகப் பணியாற்றினார் என்று இஸ்ரேலிய இராணுவம் அப்பட்டமான பொய்யை உலகிற்கு தெரிவித்துள்ளது.)

பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீன போரால் இதுவரை 286 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு அமைப்பு உறுதி செய்துள்ளது.

1948 இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு போர் நிருபர்கள், தொழில்முறை ஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது காசாவில் இஸ்ரேலிய தாக்குதலில் ஐந்து அல் ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை அல்ஜசிரா ஊடகவியலாளர்கள் மீது 10.08.25 இஸ்ரேலிய இராணுவத்தால் இலக்கு வைக்கப்பட்ட படுகொலை நிகழ்ந்துள்ளது. பத்திரிகை சுதந்திரத்தின் மீதான மற்றொரு அப்பட்டமான மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தாக்குதலில் காசாவில் இஸ்ரேலிய தாக்குதலில் ஐந்து அல்ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். இதனை ஊடக சுதந்திர மீறல் என்று சர்வதேச ஊடக நிறுவனங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

### ஐந்து அல்ஜசீரா ஊடகர்கள் கொலை

காசா நகரின் அல்-ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே இஸ்ரேலிய தாக்குதலில் இந்த ஐந்து அல்ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அல்ஜசிரா நிருபர்கள் அனஸ் அல்-ஷெரிப், முகமது கிரீகே, ஒளிப்பதிவாளர் இப்ராஹிம் ஜாஹர், முகமது நௌபால் மற்றும் மோமென் அலிவா ஆகியோர் கொல்லப்பட்டனர். மருத்துவமனையின் பிரதான வாயிலில் பத்திரிகையாளர்களுக்கான கூடாரத்தில் அந்த படுகொலை திட்டம் குறிவைக்கப்பட்டது என்று அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதல் நடந்த சிறிது நேரத்திலேயே, அனஸ் அல்-ஷெரிப்பை குறிவைத்ததாக இஸ்ரேலிய ராணுவம் உறுதிப்படுத்தியது. அவர் ஹமாஸில் ஒரு பயங்கரவாதப் பிரிவின் தலைவராகப் பணியாற்றினார் என்று இஸ்ரேலிய இராணுவம் அப்பட்டமான பொய்யை தெரிவித்துள்ளது.

### பாலஸ்தீன ஊடகம் மீதான தொடர் அச்சுறுத்தல்

பாலஸ்தீனத்தில் 7 ஒக்ரோபர் 2022 இலிருந்து இன்றுவரை 286 ஊடகவியலாளர்கள் காசா மண்ணில் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து அல்ஜசீராவின் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் 22.09.24 இல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவில் உள்ள அல் ஜசீராவின் அலுவலகத்தை இஸ்ரேலிய இராணுவம் வலுக்கட்டாயமாக மூடியது. இதனை உலகளாவிய பத்திரிகை சுதந்திர உரிமை ஆர்வலர்கள் கண்டித்தனர். இது பத்திரிகை மீதான கொடுந் தாக்குதல் என கூறப்பட்டது.

காசாவில் இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறை பற்றி நீண்டகாலமாக அல்

தொடர்ச்சி▼




# அல்ஜசீரா ஊடகவியாளர் இஸ்ரேலால் படுகொலை: பாலஸ்தீன ஊடகம் மீதான தொடரும் அச்சுறுத்தல்!

தொடர்ச்சி▲

ஜசீரா விரிவான செய்திகளை வழங்கி வருகிறது.

இதுவரை காசாவில் போர் தொடங்கியதில் இருந்து பலஅல்ஜசீராஊடகவியலாளர்கள்கொல்லப்பட்டுள்ளனர். மேலும் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீன பிரதேசத்தில் உள்ள அல்ஜசிரா அலுவலகம் பலமுறை குண்டுவீசி தாக்கப்பட்டது. ஆயினும் செய்தியாளர்களை குறிவைக்க வில்லை என்று இஸ்ரேல் அப்பட்டமாக பொய் கூறி வருகிறது.

**பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரானது**

சர்வதேச பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, இஸ்ரேலிய தாக்குதலாலை கடுமையாக கண்டித் துள்ளது.

அல் ஜசீராவை தணிக்கை செய்வதற்கான இஸ்ரேலின் முயற்சிகள், பிராந்தியத்தில் பல உயிர்களை பறித்த கொடும் போர் பற்றிய தகவலுக்கான பொது மக்களின் உரிமையை கடுமையாக பாதிப்புக்கு உட்படுத்துகிறது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.

அல் ஜசீராவின் பத்திரிக்கையாளர்கள் இந்த நெருக்கடியான நேரத்திலும் திறமையாக பணியாற்றி உள்ளனர். எப்பொழுதும் அவர்களை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

**எல்லைகளற்ற நிருபர்கள் கண்டனம்**

எல்லைகளற்ற நிருபர்கள் அல் ஜசீரா மீதான இஸ்ரே லின் இடைவிடாத தொடர் அழுத்தங்களைக் கண்டிக்கிறது என்றும் கூறியுள்ளது. அல் ஜசீரா ஊடகத்தை குறிவைத்து வெளிநாட்டு ஊடகங்களை மூடுவதற்கு இஸ்ரேல் அரசை அனுமதிக்கும் இஸ்ரேலிய சட்டத்தை ரத்து செய்ய ஆர்.எஸ்.எவ். முன்பு அழைப்பு விடுத்திருந்தது.

அத்துடன் பாலஸ்தீனிய பத்திரிகையாளர்கள் சங்கம், இஸ்ரேலிய இராணுவ கொடூரத்தை கண்டனம் செய்ததுள்ளது. இது பத்திரிகை பணி மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிரான ஒரு புதிய ஆக்கிரமிப்பு என்றும் கூறியுள்ளது.

**பத்திரிகையாளருக்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்**

பாலஸ்தீனத்தில் அல் அய்யம்,அல்-ஹயாத் அல்-ஜடிதா, அல் கர்மில், அல் மனார்,அல் மசார் ஆகிய பத்திரிகைகள் போர்க்காலத்திலும் வெளிவந்தன.

தொடர்ந்து காசா நகரில் இஸ்ரேலின் நேரடி அச்சுறுத் தல் பத்திரிகையாளர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அல் குத்ஸ்,பாலாஸ்தீன் அல்-முஸ் லிமா,அல்-இத்திஹாத், குல் அல் அரபு அல்-மதீனா ஆகிய ஊடகங்களின் பத்திரிகையாளர்க்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். பாலஸ்தீனத்தின் ஹமாஸ் - இஸ்ரேல் படையினருக்கும் இடையே ஆரம்பித்த போர் இன்னமும் தீவிரமாக தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் படையினர் காசா பகு தியை கொடூரமாக தாக்கி அழித்து வருகின்றனர்.

இந்த நிலையில் காசாவில் போர் பற்றிய விவரங் களைச் சேகரிக்கப் பல்வேறு நாட்டில் இருந்து பத்திரி கையாளர்கள் சென்றிருந்தனர். தகவல் சேகரிக்கச் சென்றவர்களில், இதுவரை 286 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர். அதில், 4 பேர் இஸ்ரேலைச் சேர்ந் தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

பல பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேல் நேரடி அச்சுறுத்தலை கொடுத்துள்ளதால் போர்க்களத் தகவல் களைச் சேகரிப்பதைப் பத்திரிக்கையாளர்கள் குறைத் துள்ளனர். அத்துடன் பாலஸ்தீன பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.








# கிருஷ்ணரின் சக்கராயுதத்தின் பெயரில் இந்தியாவின் வான் பாதுகாப்புக் கவசம்!

## புதுடில்லியில் நேற்று சுதந்திர தின விழாவில் 'சுதர்சன சக்ரா' பற்றி பிரதமர் மோடி அறிவிப்பு

இஸ்ரேலின், 'அயர்ன் டோம்' போல், இந்தியாவின் வான்பரப்பை பாதுகாக்க, 'சுதர்சன சக்ரா' திட்டம் தயாராகி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலேயே மிகுந்த கவனத்துடன், பாதுகாப்பு அம்சங்களுடன் உருவாக்கப்படும் இந்த வான் கவசம், 2035ல் முழு செயல்பாட்டுக்கு வரும் என கூறப்படுகிறது.

டில்லியில் நேற்று நடந்த சுதந்திர தின விழாவில், 'சுதர்சன சக்ரா' வான் பாதுகாப்பு கவசம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி பேசியிருந்தார்.

"ஸ்ரீ கிருஷ்ணரின் சுதர்சன சக்ரா பாதையை நாங்கள் தேர்வு செய்துள்ளோம்.

"நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக, உருவாக்கப்பட்டு வரும் இந்தக் கவச அமைப்பு, எந்தவொரு தாக்குதலையும் தாங்கும் திறன் கொண்டது. அடுத்த, 10 ஆண்டுகளில் செயல்பாட்டுக்கு வரும்." என அவர் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

நம் நாட்டின் மிகவும் மேம்பட்ட வான் பாதுகாப்பு வலையமைப்பை, ஓர் அதிநவீன ஏவுகணைத் தாக்குதல் படையுடன் இணைப்பதே, சுதர்சன சக்ரா திட்டத்தின் மையமாகும்.

அதன்படி, ஐ.ஏ.சி.சி.எஸ். எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட ஏர் கமாண்ட் மற்றும் கன்ட்ரோல் சிஸ்டம் நெட்வொர்கை, ஒருங்கிணைக்கப்பட்ட ஏவுகணை கட்டமைப்புடன் சேர்த்து பயன்படுத்துவதே இந்த திட்டத்தின் இலக்கு.

இந்தக் கலவையானது, அச்சுறுத்தல்களை கண்டறிந்து, துல்லியமான தாக்குதல்களை வழங்குவதற்கான தடையற்ற வலையமைப்பை உருவாக்கும். இதன் வாயிலாக, நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பாதுகாக்கப்படும்.

அச்சுறுத்தல் ஐ.ஏ.சி.சி.எஸ். என்பது ஒரு முழுமையான தானியங்கி, நிகழ்நேர வான் பாதுகாப்பு கட்டளை அமைப்பாகும். இது, பல்வேறு சென்சார்கள், ரேடார்கள் மற்றும் ஆயுத அமைப்புகளை ஒருங்கிணைத்து, விரிவான வான் சூழ்நிலை தொடர்பான தகவல்களை வழங்குகிறது.

இது, வான், நிலம் மற்றும் கடற்படைகளுக்கு இடையே

தொடர்ச்சி▼





# கிருஷ்ணரின் சக்கராயுதத்தின் பெயரில் இந்தியாவின் வான் பாதுகாப்புக் கவசம்!

தொடர்ச்சி▲

தடையற்ற ஒருங்கிணைப்பை செயல்படுத்துகிறது. அதுமட்டுமின்றி வான்வழி அச்சுறுத்தல்களுக்கு விரைவான பதிலடி தருவதையும் உறுதி செய்கிறது.

ஐ.ஏ.சி.சி.எஸ்., என்பது, 'பைபர் ஆப்டிக்' அடிப் படையிலான தொலைதொடர்பு கட்டமைப்புடன் சென் சார்கள், போர் விமானங்கள், ஆகாஷ், பராக் – 8, எம். ஆர்.எஸ்.ஏ.எம்., மற்றும் எஸ் – 400 போன்ற ஏவுகணை அமைப்புகளுக்கு உடனடி தகவல்களை வழங்குகின்றன. இதனால், எதிரி விமானங்கள், ட்ரோன்கள் அல்லது ஏவுகணைகளை கண்காணிக்கவும், பொருத்தமான எதிர் நடவடிக்கைகளை விரைவாகப் பயன்படுத்தவும் படைகளுக்கு உதவுகிறது.

கிருஷ்ணரின் கையில் உள்ள ஆயுதம் 'சுதர்சன சக்கரம்' (சக்கர ஆயுதம்) ஆகும். இதை சக்கரத்தாழ்வார் என்றும் அழைப்பர். இது திருமாலின் ஆயுதங்களில் ஒன்று. இது விஷ்ணுவின் கைகளில் ஒன்றில் காணப்படும். வைணவ சம்பிரதாயத்தில், இந்த சக்கரம் சுதர்சன சக்கரமாக வணங்கப்படுகிறது,

கிருஷ்ணர் கையில் இருக்கும் 'சக்கராயுதம்' (சக்கர ஆயுதம்) போல இந்த ஆயுதக் கட்டமைப்பும் வலிமையாக முழு இந்திய வான் பரப்புக்கும் பாதுகாப்புக் கடமைப்பை வழங்குவதால் இதற்கும் 'சுதர்சன சக்ரா' என்று பாரதீய ஜனதா அரசு பெயரிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சக்கரத்தாழ்வார் என்பவர், திருமாலின் ஆயுதங்களில் ஒன்றான சக்கராயுதம். இவர் சுதர்சனர், திருவாழியாழ் வான், சக்கரம், திகிரி என்றும் அறியப்பெறுகிறார். இவர் பதினாறு கைகளை கொண்டவராகவும், சில இடங்களில் முப்பத்திரண்டு கைகள் கொண்டவராகவும் அறியப்பெறுகிறார். திருமால் கோவில்களில் சக்கரத்தாழ்வாருக்கென தனி சந்நிதி காணப்பெறுகிறது.

திருமாலின் திருக்கரத்தில் இருக்கும் சக்ரத்தாழ்வார் காத்தல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கிறார்.

### புராண நோக்கில் சுதர்சன சக்கரம்

சுதர்சன சக்கரத்தைத் தன் கரத்தில் வைத்திருப்பார் ஸ்ரீகிருஷ்ணர். சுதர்ஷன் என்றால் மங்கலகரமானது என்று பொருள். "சக்ரா" என்றால் சக்கரம் போல் சுழன்று கொண்டு எப்பொழுதும் செயல்பாட்டில் இருப்பது என்று அர்த்தம்.

எல்லா ஆயுதங்களைக் காட்டிலும் இது ஒன்றே எப்பொழுதும் சுழன்று கொண்டிருக்கிறது.

சாதாரணமாக 'சுதர்சன சக்கரம்' கிருஷ்ணனின் சுண்டு விரலில் காணப்படும் ஆனால் மகாவிஷ்ணுவோ ஆள்காட்டி விரலில் வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் யார் மீதாவது ஏவும் பொழுது கிருஷ்ணனும், ஆள்காட்டி விரலில் இருந்து தான் ஏவுகிறார்.

தொடர்ச்சி▼



# கிருஷ்ணரின் சக்கராயுதத்தின் பெயரில் இந்தியாவின் வான் பாதுகாப்புக் கவசம்!



**தொடர்ச்சி▲**

எதிரிகளை அழித்த பின் சுதர்சன சக்கரம் மீண்டும் இறைவனின் கரத்திற்கே திரும்பி விடுகிறது.

சுதர்சன சக்கரம் ஏவப்பட்ட பிறகும் ஏவி விட்டவனின் கட்டளைக்கு அது கீழ்ப்படிந்து நடக்கிறது. எவ்வித அழுத்தமும் இல்லாத சூன்யப்பாதையில் செல்வதால் சுதர்சன சக்கரத்தால் எந்த இடத்திற்கும் கண்மூடி கண் திறக்கும் நேரத்திற்குள் செல்ல முடிகிறது. ஏதாவது தடை எதிர்பட்டால். சுதர்சன சக்கரத்திரன் வேகம் அதிகரிக்கிறது. இதை 'ரன்ஸகதி' என்பர்.

சுதர்சன சக்கரம் சுழலும் போது சத்தம் எழுப்புவ தில்லை.

சுதர்சன சக்கரத்தின் உருவம் வடிவம் எத்தகையது என்றால் சின்னஞ்சிறு துளசி தளத்தில் அடங்கக் கூடியது. அதே சமயம் இப்பிரபஞ்சம் அளவு பரந்து விரிந்தது.

ஆனி மாதம் தசமி திதியில், சித்திரை நட்சத்திரத்தில், ஸ்ரீ சக்கரத்தாழ்வார் அவதாரத் திருநாள், ஸ்ரீ சுதர்சன ஜயந்தி உற்சவமாக கொண்டாடப்படுகிறது.

மந்திரம், தந்திரம், யந்திரம், அஸ்திரம், சஸ்திரம் ஆகிய அனைத்தையும் அழித்து, துயர்களிலிருந்து மக்களைக் காக்கவல்லது மகா சுதர்சனச் சக்கரம். இந்தச் சக்கரம், சிவபெருமானின் ருத்ர சக்தியையும் தன்னுள் கொண்டுள்ளது.

கிருஷ்ணரின் கையிலிருந்த சுதர்சன சக்கரம், அர்ஜ/னனை அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் காத்தருளியது. அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்ட அவனுடைய செயல்கள் அனைத்திலும் துணை நின்றது.

மகா சுதர்சனத்தை வழிபடுகிறவர்கள், சிவனாரையும், ஸ்ரீமந் நாராயணனையும் சேர்த்து வழிபட்ட பலனைப் பெறுகின்றனர். திருமாலின் ஆக்ரோஷமான ஸ்ரீசுதர்சன மூர்த்தியே திருமாலின் காத்தல் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பவர். சுதர்சன சக்கரம் வீரம் அளிக்கும். தீராத நோய்களைத் தீர்க்கும். போர்முனையில் வெற்றியினைத் தேடித் தரும். எல்லாவிதமான எதிரிகளையும் நீக்கி மங்களம் அளிக்கும் .

ஸ்ரீ அனந்தன் என்ற நாகம், கருடன், ஸ்ரீ சுதர்ஸ னம் – இம்மூவரும் பகவானை ஒரு நொடி கூட பிரியாது அவரைத் தொழும் 'நித்யசூரிகள்' ஆவார்கள்.

திருமால், தனது எல்லா அவதாரங்களிலும் துஷ்ட நிக்ரஹத்தை ஸ்ரீசுதர்ஸனம் மூலமே நிகழ்த்தி அருளினார் உலக இயக்கத்திற்கே ஆதாரம் ஸ்ரீசுதர்ஸ னமே.

சுதர்சன சக்கரம் பக்தர்களுக்கு சந்தோஷம் தரும். பக்தர்களுக்கு வரும் பகையை அழித்து, உள்ளார்ந்த பயத்தை போக்கிக் காப்பவர் சுதர்சனர்.

மனிதனின் நிம்மதியை பாதிப்பவை கடன், வியாதி, எதிரி தரும் துன்பம் அபிசார தோஷங்கள் எனப்படும் பில்லி, சூன்யம் போன்றவற்றால் ஏற்படும் உபாதைகளை முற்றிலும் நீக்கி சந்தோஷத்தை அளிப்பவர். இவர் கல்வியில் தடையை நீக்கி கல்வி யோகத்தைத் தருபவர்

சுதர்சன யந்திரம் உள்ள இடத்தில் தீய எண்ணங்களோ, சக்திகளோ புக முடியாது நோய், கடன் தொல்லைகள், எதிரிகள், வழக்குகள் போன்றவற்றால் மீளமுடியாத பிரச்சினைகளை சந்தித்து வருபவர்கள்

ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை வழிபடுவது, சுதர்சன உபாசனை செய்வது சிறந்த பயனளிக்கும். மேலும் புற்றுநோய் போன்ற உயிர் கொல்லி நோய் உடையவர்கள் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை வணங்கி வருவதால் நோய் நீங்கி மரணபயம் போகும் பக்தர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால், பெருமாளுக்கே இடையூறு ஏற்பட்டாற்போல் விரைந்து காப்பவர் ஸ்ரீசக்கரத்தாழ்வார்.

இவை புராண நம்பிக்கைகள். அந்த சக்கராயுதத்தின் பெயரில் இந்தப் புதிய பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்குகின்றது.



# பா.ஜ.கவில் இணைந்தார் திரைப்பட நடிகை கஸ்தூரி

நடிகை கஸ்தூரி நேற்று சென்னை தியாகராய நகரில் அலுவலகத்தில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில் கட்சியில் இணைந்தார்.

இதுகுறித்து நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"நடிகை கஸ்தூரியும், நடிகையும், சமூக செயற்பாட்டாளரும், நமிஸ் சவுத் குயின் இந்தியா நிறுவனத்தின் தலைவருமான திருநங்கை நமிதா மாரிமுத்துவும் இன்று சென்னை பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் தமிழ்நாடு பா.ஜ.க. கலை மற்றும் கலாசார பிரிவு தலைவர் பெப்சி சிவா முன்னிலையில், இணைந்தனர்.

சமூக செயல்பாட்டாளரான கஸ்தூரி மற்றும் நமீதா மாரிமுத்து இன்று முதல் அதிகாரபூர்வமாக அரசியல் பயணத்தில் இணைந்திருப்பது வரவேற்கத்தக்கது. அவர்களுடைய அரசியல் பயணம் பா.ஜ.கவில் தொடங்கி இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.



# தொழிலதிபரிடம் 60 கோடி ரூபா மோசடி: நடிகை ஷில்பா ஷெட்டி, கணவர் மீது வழக்கு

தொழிலதிபர் ஒருவரிடம் 60 கோடி இந்திய ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் நடிகை ஷில்பா ஷெட்டி மற்றும் அவரது கணவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

லோட்டஸ் கேப்பிட்டல் பைனான்ஸ் சர்வீஸ் (வங்கி சாரா நிதி நிறுவனம்) நிறுவனத்தின் இயக்குநர் தீபக் கோத்தாரி (வயது 60). ஜூஹூவை சேர்ந்த தொழிலதிபரான இவர் பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில்,

"நடிகை ஷில்பா ஷெட்டி கடன் பெற விரும்புவதாக எனது நிறுவனத்தில் கடன் முகவராக பணிபுரிந்த ராஜேஷ் ஆர்யா தெரிவித்தார். அதன் அடிப்படையில் நடிகை ஷில்பாவையும், அவரது கணவர் ராஜ் குந்த்ராவையும் ஜூஹூவில் சந்தித்துப் பேசினேன். அப்போது அவர்கள், தங்களிடம் ஒன்லைன் விற்பனை தளமான பெஸ்ட் டீல் டிவி நிறுவனம், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட ஏராளமான சொத்துகள் இருப்பதாக கூறினார்.

இதன் அடிப்படையில் அவர்களுக்கு 60.48 கோடி இந்திய ரூபா கடன் கொடுத்தேன். இந்நிலையில் 2017 இல் அந்த நிறுவனத்துக்கு எதிராக திவால் நடவடிக்கை தொடங்கப் பட்டது. எனது பணத்தை பலமுறை கேட்டும் அதற்கு சரியான பதில் கிடைக்கவில்லை." என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புகாரின் அடிப்படையில் மும்பை பொலிஸார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். 10 கோடி இந்திய ரூபாவுக்கு அதிகமான தொகை என்பதால் இந்த வழக்கு பொருளாதார குற்றப்பிரிவு விசாரணைக்காக மாற்றப்பட்டுள்ளது.



# தேர்தல் தோல்வி பயம் காரணமாக தி.மு.க. ஏராளமான திட்டங்களை அறிவிக்கின்றது

## கே.பி.ராமலிங்கம் குற்றச்சாட்டு

தோல்வி பயத்தால் இறுதி நேரத்தில் திமுக ஏராளமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது என்று பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம் கூறியுள்ளார்.

சுதந்திர தினத்தையொட்டி, பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம் தலைமையிலான பா.ஜ.க. கட்சியினர் நேற்று தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி நகரில் இருந்து சுப்பிரமணிய சிவா மணி மண்டபம் வரை பேரணியாக சென்றனர். பின்னர் மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா நினைவாலயத்தில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

தொடர்ந்து, 3 ஆண்டுகளுக்கு முன்பு இதே பாரத மாதா நினைவாலயத்தில் அத்துமீறி நுழைந்ததாக கே.பி. ராமலிங்கம் உட்பட 11 பேர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் அனைவரும் சில மாதங்களுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்டனர். அதில் பங்கேற்ற நிர்வாகிகளுக்கு கே.பி.ராமலிங்கம் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், "79 ஆவது சுதந்திர தினத்தையொட்டி பாப்பாரப்பட்டி பாரத மாதா ஆலயத்தில் மாலை அணிவித்து மரியாதை செய்து கொண்டாடியுள்ளோம். இந்த பாரத மாதா ஆலயத்தில் பூமித் தாய் தான் கடவுளாக அமர்ந்துள்ளார். எனவே, இந்த இடம் ஆலயம் தான். ஆனால், நினைவாலயம் என பெயரிடப்பட்டுள்ளது. வரவிருக்கும் தேர்தலுக்கு பின்னர் அதை ஆலயம் என மாற்றி நிலை நாட்டுவோம். தேவைப்பட்டால் இதற்காக நீதிமன்றத்துக்கும் செல்வோம்.

நெல்லை மாவட்டம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. பட்டமளிப்பு விழாவில் ஆளுநரிடம் பட்டம் வாங்க மறுத்த மாணவியை நான் மாணவியாகவே கருதவில்லை. பட்டமளிப்பு விழாவில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற சாதாரண நடைமுறை கூட தெரியாதவர். அவரது நடவடிக்கை மூலம் ஆளுநரை அவமானப்படுத்தியதாகக் கருதிக் கொண்டு ஆளும் கட்சியும், அவர்களை சார்ந்துள்ளவர்களும் தூபம் போடு கின்றனர்.

தி.மு.க-வும், முதல்வரும் இன்று தோல்வி பயத்தில் துவண்டு காணப்படுகின்றனர். வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமையும் என்பதை தெரிந்து கொண்டு தான் இன்று ஏராளமான திட்டங்களை அறிவித்து வருகின்றனர். அந்த திட்டங்களுக்கான பொருளாதார சூழல், கட்டமைப்பு ஆகியவை பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை. இந்த திட்டங்கள் அனைத்தும் ஏமாற்று வேலை.

கடந்த 4 ஆண்டுகளில் மாநில மக்களுக்கு செய்யாதவற்றை, மீதமுள்ள சில மாதங்களில் செய்வதாக வெளி வேஷம் போட்டு வருகிறார். இவையெல்லாம் தோல்வி பயத்தில் நடத்தும் நாடகங்கள். தமிழகத்தின் தீய ஆட்சியான தி.மு.க. ஆட்சியை அகற்றுவதை நோக்கி நாங்கள் பயணிக்கிறோம்." என்றார்.இந்நிகழ்ச்சியின் போது, கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.








# ட்ரம்ப் - புட்டின் சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் இல்லை

அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா மாகாணத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்ய ஜனாதிபதி புடினை நேருக்கு நேர் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர் நிறுத்தம் தொடர்பான இணக்கமும் ஏற்படவில்லை.

எனினும், விளாடிமிர் புடினுடனான, உக்ரைன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தானும் புடினும் ஒரு ஆக்கப்பூர்வமான சந்திப்பை நடத்தியதாகவும், அதில் சில முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேட்டோ கூட்டாளிகள் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி உட்பட்டவர்கள், பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கப்படுவார்கள் என்றும், இறுதி உடன்படிக்கைக்கு இணங்கவேண்டும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் உண்மையான ஆர்வம் இருப்பதாக புட்டின் கூறியுள்ளார்.

மீண்டும் தமக்கிடையிலான ஒரு சந்திப்பு விரைவில் இடம்பெறும் என்றும் அது மொஸ்கோவில் இடம்பெறும் என்றும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனியர்களும் ஐரோப்பியர்களும் சமாதான முன்னெடுப்புகளில் தலையிட மாட்டார்கள் என்று தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ட்ரம்ப் தனது நாட்டின் செழிப்பில் தெளிவாக அக்கறை கொண்டுள்ளார். ரஷ்யாவுக்கு அதன் சொந்த நலன்கள் இருப்பதைப் புரிந்து கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலுக்கான முதன்மைக் காரணங்களை அகற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், நெருங்கிய அண்டை நாடுகள் என்று புடின் கூறியுள்ளார்.

1800 களின் நடுப்பகுதியில் அமெரிக்காவிற்கு விற்கப்படுவதற்கு முன்னர் சந்திப்பு இடம்பெற்ற அலாஸ்கா, ரஷ்யாவின் ஒரு பிரதேசமாக இருந்தது என்பதை புடின் நினைவுபடுத்தியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் இரண்டு ஜனாதிபதிகளும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.









# வொஷிங்டனின் குற்ற அவசரநிலை; அறிவித்துள்ளார் டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வொஷிங்டன் நகரத்தில் குற்ற அவசரநிலை அறிவித்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், ட்ரம்ப் 800 தேசிய பாதுகாப்பு படையினரை நகரம் முழுவதும் நியமித்துள்ளார்.

பாதுகாப்பு படையினர், நகர பொலிஸாருடன் இணைந்து நினைவுச்சின்னங்கள் பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ரோந்துகள், பெடரல் கட்டடங்கள் மற்றும் அதிகாரிகளை பாதுகாப்பது, போக்குவரத்து கட்டுப்பாடு போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுக்கு யாரையும் கைது செய்யும் அதிகாரம் இல்லை ஆனால் சட்ட அமலாக்கத்திற்கு உதவும் வகையில் தற்காலிகமாக தடுத்து வைக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 14 ஆம் திகதி முதல் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ள



துடன் அதில் 29 பேர் நாட்டில் சட்ட விரோதமாக வசிப்பவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது, 1,650 இற்கும் மேற்பட்டோர் இந்த சட்ட அமலாக்க நடவடிக்கையில் பங்கேற்று வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வொஷிங்டன் நகரத்தில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என ட்ரம்ப் தெரிவித்ததையடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் தரவுகளின்படி, 2024 இல் வன்முறை குற்றங்கள் குறைந்துள்ளன என்பதை சுட்டிக்காட்டி, இது அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நகரத்தை மீட்டெடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என ட்ரம்ப் தெரிவித்துள்ளதுடன், பாதுகாப்பு படையினர், சட்டம் மற்றும் ஒழுங்கு மீண்டும் நிலைநிறுத்தப்படும் வரையில் நகரத்தில் இருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# நிவாரணப் பொருள்களை கொண்டு சென்ற ஹெலிக்கொப்டர் விபத்து; ஐவர் உயிரிழப்பு

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில், மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பொருள்களை கொண்டு சென்ற எம்.ஐ.-17 ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்திற்கு உள்ளாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்தானது நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், இரு விமானிகள் உட்பட மொத்தம் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டள்ளது.

வடக்கு பாகிஸ்தானில் கடுமையான வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கிச் செல்லும் போதே இந்த ஹெலிக்கொப்டர் கட்டுப்பாட்டை இழந்ததாகவும், மோசமான வானிலைதான் விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
சனிக்கிழமை 16/08/2025

## கனடாவில் புதிய கார்களின் விலைகள் உயர்வடைந்தன

கனடாவில் புதிய கார்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக புதிய கார் ஒன்றின் சராசரி விலை 66000 டொலர்களைக் கடந்துள்ளதாக 03▶



# சிரியாவில் கனேடிய பெண் தீவிரவாதிகளுக்காக பெருந்தொகை செலவிட்டார் ஜஸ்டின் ட்ரூடோ

**சிரியாவிலிருந்து ஐ.எஸ். பெண் தீவிரவாதிகளை அழைத்து வருவதற்காக கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குறைந்தது 170,000 டொலர் தொகையை செலவிட்டுள்ளார் என அரசாங்க ஆவணங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.**

**ஐ.எஸ் அமைப்பில் இணைவதற்காக சிரியா சென்ற கனேடியர்களில் 8 பெண்களை திரும்ப அழைத்து வரவே ட்ரூடோ அரசாங்கம் சுமார் 170,000 டொலர் தொகையை செலவிட்டுள்ளது.**

**அத்துடன், இரவு ஒன்றிற்கு 300 டொலர் கட்டணம் வசூலிக்கும் உயர்ரக ஹொட்டல் ஒன்றிலும் அந்த 8 பெண்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்புடைய பெண்கள் ஐ.எஸ் அமைப் பில் இணையும் பொருட்டே சிரியா சென்றுள்ளனர்.**

ஆனால், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அவர்கள் கனடாவுக்குத் திரும்பியபோது மக்கள் வரிப்பணத்தில் ஆடம்பரமாக செலவு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஹொட்டல் அறையில் இரண்டு நாட்களுக்கான செலவு 1000 டொலருக்கும் மேலாகியுள்ளது.

இன்னொரு அறைக்கு 850 டொலர் செலவாகியுள்ளது. மட்டுமின்றி, 8 பேர்களுக்கும் உணவுக்கு மட்டும் 2,800 டொலர் செலவிடப்பட்டுள்ளது. நொறுக்குத்தீனிகளுக்கு என 86 டொலர் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் வரிப்பணத்தில் அவர்கள் இனிப்பு உட்பட பரிசுப்பொருள்களும் வாங்கிச் சென்றுள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு வீழ்த்தப்பட்ட பின்னர் தொடர்புடையப் பெண்கள் தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப்பட்ட நிலையில் கனடாவுக் குத் திரும்பக் கொண்டுவரப்பட்டனர்.

அவர்களைத் திருப்பி அழைத்து வரக் கோரி அவர்களது குடும்பத்தினர் கனேடிய பெடரல் நீதிமன்றத்தில் சட்டப் போராட்டத்தைத் தொடங்கிய நிலையிலேயே ட்ரூடோ அரசாங்கம் அந்த முடிவுக்கு வந்தது.

வெளியான அரசாங்க ஆவணங்களின்படி, மேற்படி பெண்கள் பிரிட்டிஷ் கொலம்பியா, ஆல்பர்ட்டா, ஒன்ராறியோ மற்றும் கியூபெக்கை சேர்ந்தவர்கள் என்றே தெரிய வருகிறது. 2022 ஒக்டோபர் மாதம் முதல் முறை யாக சிரியாவில் இருந்து இரண்டு கனேடியப் பெண்கள் அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுக்கான செலவு 10,863 டொலர் என்றே கூறப்பட்டது. மீண்டும் ஏப்ரல் 2023 இல், நான்கு பெண்கள் மற்றும் அவர்களது 10 குழந்தைகளைத் திரும்பப் பெறுவதற்காக கனேடிய அரசாங்கம் 132,445 டொலர் தொகையை செலவிட்டது.

தற்போது வெளியான இந்த 170,000 டொலர் தொகையானது, அவர்கள் 8 பேர்களும் தங்கள் மாகாணங்களுக்குத் திரும்புவதற்கு முன்பு மாண்ட்ரீலில் வந்திறங்கும் வரையான செலவுகள் என்றே கூறப்படுகிறது.






# பயணம் செய்த வாகன சாரதி மீது பயணியொருவர் துப்பாக்கிச் சூடு

கனடாவின் டொராண்டோவில் பயணம் செய்த வாகனத்தின் சாரதி மீது பயணியொருவர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளார்.

டவுன்ஸ்வியூ பூங்கா அருகே, ஒரு வாகனத்தில் பயணித்த பயணி, வாகன ஓட்டுநரை துப்பாக்கியால் சுட்டதாகவும், பின்னர் மற்றொரு வாகனத்துடன் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்டான்லி கிரீன் மற்றும் டவுன்ஸ்வியூ பூங்கா பவுல்வர்ட்ஸ் பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது. ஒரு வாகனத்தில் இருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது,

அவர்களுக்கு இடையே வாக்கு வாதம் ஏற்பட்டு, அது துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர்கள் எதிர் திசையில் வந்த மற்றொரு வாகனத்துடன் மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




சுடப்பட்ட ஓட்டுநர், உயிருக்கு ஆபத்து இல்லாத காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். விசாரணையின் போது, தோட்டா ஏற்றப்பட்ட துப்பாக்கி ஒன்றை மீட்டுள்ளனர்.

சந்தேகநபராக 24 வயது ஃபைசல் ஜிப்ரில் அடையாளம் காணப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.



# சட்டப்பூர்வ புலம்பெயர்தலின் அளவை குறைக்கவேண்டும்

## கனேடியர்களில் ஒரு தரப்பு விருப்பம்

கனேடிய மக்கள் புலம்பெயர்தல் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய அவ்வப்போது கனடாவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுண்டு.

அவ்வகையில், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், ஒரு தரப்பு கனேடியர்கள், சட்டப்பூர்வ புலம்பெயர்தலின் அளவையே குறைக்கவேண்டும் என கருதுவது தெரியவந்துள்ளது.

Research Co. என்னும் ஆய்வமைப்பு, புலம்பெயர்தல் குறித்து கனேடிய மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக ஆய்வொன்றை மேற்கொண்டது.

ஆய்வில் பங்கேற்றவர்களில், 55 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடையவர்களில், ஏழில் ஒரு கனேடியர், சட்டப்பூர்வ புலம்பெயர்தலின் அளவையே குறைக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

35 முதல் 54 வயதுடையவர்களில் 40 சதவிகிதம் பேரும் இதே கருத்தைத் தெரிவித்துள்ள நிலையில், 18 முதல் 34 வயதுடையவர்களில் 30 சதவிகிதத்தினர் சட்டப்பூர்வ புலம்பெயர்தலின் அளவை குறைக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

புலம்பெயர்தல் நாட்டின் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறதா அல்லது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்னும் கேள்வியும் முன்வைக்கப்பட்டது.

43 சதவிகித கனேடியர்கள் புலம்பெயர்தல் நாட்டின் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், 39 சதவிகித கனேடியர்கள் புலம்பெயர்தல் நாட்டின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக தாங்கள் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

அதேபோல, புலம்பெயர்தல் தொடர்பில் மக்கள் என்ன கருத்துக்கள் கொண்டுள்ளார்கள் என்பது, அவர்கள் சார்ந்த கட்சி, அவர்கள் வாழும் மாகாணம், அவர்களுடைய வயது, அவர்கள் சார்ந்த பூர்வீகம் என பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன என்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.



# பொலிஸ் போன்று நடித்து பணம் திருடிய நபர்கள்

கனடாவில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று நடித்து ஒருவரிடமிருந்து பணம் திருடப்பட்டுள்ளது.

நபர் ஒருவரிடமிருந்து மேற்படி சந்தேக நபர்கள் 15000 டொலர்களை திருடியுள்ளனர் என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர்களை கைது செய்யும் முனைப்புக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபரின் கணக்கில் மோசடிகள் இடம்பெறுவதாக மிரட்டி இந்தப் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் பொலிஸ் அதிகாரிகள் என அடையாளப்படுத்திய நபர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டவரின் வங்கி அட்டைகளை எடுத்துச் சென்று பணத்தை அபகரித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் பற்றிய விப ரங்கள் ஏதேனும் இருந்தால் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

# கனடா, வாட்டர்லூ கிச்சனரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பில் இருவர் கைது

கனடாவின் வாட்டர்லூ கிச்சனரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாட்டர்லூ பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விக்டோரியா ஸ்ட்ரீட் நார்த் மற்றும் ஃபார்ஃபார் அவென்யூவில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிருக்கு ஆபத்தில்லாத காயம் அடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.



இந்த தாக்குதல் திட்டமிட்டு குறிப்பிட்ட நபரை இலக்காக வைத்த தாக்குதல் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திலிருந்து இரு ஆண்கள் தப்பி ஓடுவதை கண்டதாகவும், சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்களை கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிச்னர் பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 27 வயதான இரண்டு ஆண்கள் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

( C01 தொடர்ச்சி)

ஒடோடிரேடர் Autotrader.ca என்ற இணைய தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

காரின் விலை அதிகரிப்பினால் அதிகளவான கொள்வானவர்கள் கடன் பெற்றுக்கொள்வதாகவும் வட்டி விகிதம் அதிகம் என்பதனால் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சராசரி கடன் வட்டி விகிதம் 7 சதவீதமாக காணப்படுகின்றது.

எனினும், மோசமான கடன் மதிப்பீடு உள்ளவர்களுக்கு இன்னும் அதிக வட்டி விகிதம் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடன் பெற்றுக்கொண்டு கார் கொள்வனவு செய்வோர் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



குறிப்பாக வருமானங்கள் வரையறுக்கப்பட்டவர்கள் இந்த நெருக்கடிளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கார் கொள்வனவு செய்த சிலர் தற்பொழுது கடன் பொறியில் சிக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.